THIRU N. DENNIS : Sir, may I know whether the Government will formulate Wild Life Schemes under the Central and U.N. Aid?

மு.ப. 9-30 மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திடமிருந்து உதவி பெறத்தான் இப்போது திட்டம் இருக்கிறது.

Sale of human hair

* 534 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the demand for the human hair offered by pilgrims in Temples has dwindled in recent times; and

(b) the steps taken to improve the sales of the same ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) உலக மார்க்கெட்டில் முடிக்கு கேட்புக் குறைவு ஏற்பட்டமையினுல் இங்கும் முடி விற்பனை குறைவு ஏற்பட்டுள்ளது. இதற்கு பிரத்தியேக நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கில்லை. பொது ஏலத்தில் விடுவதுதான் அதிக உயர்வு பயன் தரும். உலக மார்க்கெட்டில் இயற்கை முடிக்கு கேட்பு ஏற்படும்போது இங்கு முடிக்கு விலையில் கூடுதல் ஏற்படலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : இந்தப் பொது விற்பனை, முடியின் அளவு குறைந்துவிட்டதால் பொதுச் சந்தையில் அவை விலை போகவில்லையா? அல்லது அளவு குறையாது வளர்ச்சி பெருத காரணத்தால் குறைந்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அளவு குறைவு இல்லை. ஆனுல் அளவு குறைந்தவர்கள் இதை உபயோகிப்பதைக் குறைத்து விட்டார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : கோவில்களில் பக்தர்களால் வழங்கப்படும் முடி விற்பனையின் அளவு அண்மையில் குறைந்து உள்ளதா என்று கேட்கப்பட்டது. கோவில்களில் பக்தர்கள் முடி விற்ருர்களா என்பதையும், அதேநேரத்தில் கோவில்களுக்குச் செல்லும் பக்தர்களுக்கெல்லாம் மொட்டை அடிக்கப்படுகிறதே என்ற காரணத்தால் கோவில்களுக்கு அதிகம் பேர்கள் செல்லவில்லையா ? என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 27]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பக்தர்களுடைய எண்ணிக்கை குறையவில்லை என்பதை நாம் பல்வேறு புள்ளிவிவரங்களில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கிருேம். ஆனல் விற்பனை குறைந்ததற்குக் காரணம் இயற்கை முடியை முன்னல் பல உபயோகங்களுக்கு உபயோகித்து வந்தார்கள். ஆனல், வெளி நாடுகளில் செயற்கை முடி தயாரிக்கப்பட்டு விட்ட காரணத்தால் இயற்கை முடிக்கு இப்போது அங்கு மார்க்கெட் குறைவாகியிருக்கிறது. ஆகவே அதனலே இங்கேயும் விற்பனை குறைந்திருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பொதுவாகவே பக்தர்கள் மொட்டை அடித்துக்கொள்வதை ஒரு அசிங்கமாகக் கருதுகிற காரணத்தால் அது குறைபடுகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது குறையவில்லை, விலை குறைந்து போயிற்று என்பதுதான் கேள்வி.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I find that some new converts are now going to Tirupathi and cut their hair—some of the people who did not earlier believe in God, but now have started believing in God—is the Government aware of it ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இங்கிருக்கிற ஆலயங்களிலேயே செய்யச் சொல்லிப் பிரசாரம் செய்யலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்த முடியை அணிகிற பெண்கள் மறைந்துவிடுகிருர்கள் என்ற கட்டுக்கதையை சமீபத்தில் விட்டு விட்டார்கள். அதனல் பக்தர்கள் அவர்களுடைய முடியைக் கொடுப்பதால் அவர்கள் முடியை அணிந்தால் மறைந்துவிடுவர்கள் என்ற பயம் காரணமாகக் கொடுக்காமல் இருக்கிருர்கள். இது கட்டுக்கதை என்பதைத் திட்டவட்டமாக அரசு அறிவித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கட்டுக்கதை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிருர்கள். அதை அவர்களே வெளியிலே பிரசாரம் செய்தால் நல்லது.

திரு. எம். தேவராசன் : தமிழ்நாட்டில் எந்தக் கோவிலில் முடி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 27

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பழனி கோவிலில்தான் அதிகமான முடி வருமானம் வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த முடியை தனியார்கள் வாங்குகிற வரையில் நல்ல கிராக்கி இருந்தது என்றும், எஸ்.டி.ஸி. எடுத்துக் கொண்டதற்குப் பிறகு கிராக்கி குறைந்துவிட்டது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, மீண்டும் தனியார்களுக்கே கொடுத்துவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்கிற வரையில்தான் அதிக விலை நமக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தேவை இல்லை என்று சொல்லிவிட்ட காரணத்தினால்தான் தனியார்களுக்கு பொது ஏலத்தில் விற்கிறபோது குறைவான விலைதான் நமக்குக் கிடைக்கிறது.

Temples in platforms of Madras City.

* 535 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to clear all the platform temples in Madras City ;

(b) if so, when this will be done; and

(c) the reasons for the delay?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) & (உ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையிலே, இப்போது தமிழகத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாகியிருப்பதைவிட சாமிகளின் பெருக்கம் அதிகமாகி ஒவ்வொரு நாளும் திடீர் திடீர் என்று ப்ளாட்பாரங்களைப் பார்க்கும்போது மூன்று நான்கு சாமிகள் உருவாகிவிடுகிறார்கள். அதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவைகளை அப்புறப்படுத்தி பொதுமக்களுக்கு நன்மை பயக்க நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நடைபாதைகளில் திடீர் என்று ஏற்படுகிற கோவில்களைத் தடுக்கவேண்டுமென்று சொல்லித்தான் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் அறநிலையத் துறை சார்பில் ஏதாவது சட்டம் கொண்டு வரலாமா என்று